விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/ விசேட இயக்கத்
தலைவரின் கையொப்பம்
(பதிவு முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :-----.

(தேவையற்றவற்றைக் கீறிவிடவும்.)

*04-238*

---

## பொதுச் சேவைகள் ஆணைக்குழு

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களம்

**இலங்கை விலை மதிப்பீட்டுச் சேவையின் பதவிநிலைத் தரத்திலுள்ள I ஆவது வகுப்பின் III ஆவது தர விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2023**

அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் I ஆவது வகுப்பின் III ஆவது தரத்திலுள்ள விலை மதிப்பீட்டாளர் பதவிக்கான 21 வெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக இங்கு குறிப்பிடப்படும் தகைமைகளை முழுமையாகக் கொண்டுள்ள, இத்திணைக்களத்தின் உதவி விலை மதிப்பீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளரால் 2023 ஆவணி மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் இப்பரீட்சை பிற்போடவோ அல்லது இரத்துச் செய்யப்படவோ முடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 2023.05.22 ஆகும்.

01. **சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகளும் சேவைக்கான நிபந்தனைகளும்.-**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்கு உரித்தானதுமாகும். விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைமைக்கான பங்களிப்புச் செய்யப்பட வேண்டும்.
(01.01.2016 ஆந் திகதிக்குப் பின்னர் நியமனம் பெற்றுள்ள அலுவலராயின், அவருக்கு 21/2017 ஆம் இலக்க பொ. நி. சுற்றறிக்கை ஏற்புடையதாகும்.)

(ii) இந்நியமனம் ஒரு வருட காலத்துக்கு பதில் கடமைக்குரியதாக இருக்கும்.

(iii) 2020.10.16 ஆந் திகதிய 18/ 2020 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அரச கரும மொழியில்/அரச கரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) இந்த நியமனமானது, பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், தாபனக் கோவையின் ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் 2142/75 ஆம் இலக்க 2019.09.27 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை விலைமதிப்புச் சேவையின் பிரமாணக் குறிப்பின் (இதன் பின்னர் "சேவைப் பிரமாணக் குறிப்பு" எனக் குறித்துக் கூறப்படும்) ஏற்பாடுகளும் திணைக்களக் கட்டளைகளும், அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள மற்றும் இனிமேல் வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் ஏற்புடையதாக இருக்கும்.

(v) நீங்கள் நியமனம் பெறுவதற்குத் தகைமை பெறும் மொழியானது. உங்களால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழியாக இருக்கும்.

02. **சம்பள அளவுத்திட்டம்**.- 2016.06.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையிலுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்கமைவாக இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615- 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00 (SL 1-2016 சம்பளத் தொகுதி) ஆகும்.

03. **தகைமைகள்**.-

(i) **கல்வித் தகைமைகள்** :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சொத்துகள் முகாமைத்துவம் மற்றும் விலை மதிப்பிடுதல் பற்றிய விஞ்ஞான விசேட பட்டம் பெற்றுள்ளதுடன், உதவி விலைமதிப்பீட்டாளர் பதவியில் உள்ள அலுவலரொருவராக இருத்தல்.

அல்லது

ஐக்கிய இராச்சியத்தின் பட்டய நில அளவையாளர்களது றோயல் நிறுவகத்தின் அங்கத்தவராக இருப்பதுடன், பட்டய விலைமதிப்பீட்டாளராகவும், உதவி விலைமதிப்பீட்டாளர் பதவியில் உள்ள அலுவலரொருவராகவும் இருத்தல்.

(ii) **அனுபவம்** :

2007.05.28 ஆந் திகதிய 1499/ 5 ஆம் இலக்க இலங்கை விலைமதிப்பீட்டாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் III ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில் மற்றும் 2019.09.27 ஆந் திகதிய 2142/ 75 ஆம் இலக்க இலங்கை விலைமதிப்பீட்டாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் II ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில் ஐந்து (05) வருடங்கள் முனைப்பானதும் திரப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தலும், ஐந்து (05) சம்பள உயர்ச்சிகளை உழைத்துப் பெற்றிருத்தலும்,

அல்லது

2007.05.28 ஆந்திகதிய 1499/5 ஆம் இலக்க இலங்கை விலைமதிப்பீட்டாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் III ஆவது வகுப்பின் I ஆவது தரத்தில் மற்றும் 2019.09.27 ஆந் திகதிய 2142/75 ஆம் இலக்க இலங்கை விலைமதிப்பீட்டாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் II ஆவது வகுப்பின் I ஆவது தரத்தில் உதவி விலைமதிப்பீட்டாளர் பதவியில் உள்ள அலுவலரொருவராக இருத்தல்.

(iii) **வேறு தகைமைகள்** :

(அ) உதவி விலைமதிப்பீட்டாளர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.

(ஆ) உதவி விலைமதிப்பீட்டாளர் II ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில் உரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்/அதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருத்தல்.

(இ) விண்ணப்பத்தின் இறுதி நாளன்று 01/2020 ஆம் இலக்க பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனை எதனையும் பெறாதிருத்தல்.

(ஈ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்குரிய எல்லாத் தகைமைகளையும் பரீட்சைக்கான அடையாளப் பத்திரத்தைப் பெறும் கடைசி நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்திருத்தல்.

04. **வயதெல்லை**.- பொருத்தமற்றது.

05. **சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை**.- எழுத்திலான போட்டிப் பரீட்சையிலும், தகுதியை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சையிலும் கிடைக்கும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும். தகுதியை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படுவதுடன், உரிய அடிப்படைத் தகைமைகள் பரீட்சிக்கப்படுவதும் அந்நேர்முகப் பரீட்சையில் இடம்பெறும்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் ஆகக்குறைந்தது 50% புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளிடையே புள்ளிகள் பெற்றதற்கான திறமை அடிப்படையிலும், வெற்றிடங்களின் எண்ணிக்கையினது இரு மடங்கு எண்ணிக்கையிலும் தகுதியை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் அழைக்கப்படுவர். (பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் இந்த விண்ணப்பதாரிகளின் பெயர்ப் பட்டியல் அகர வரிசையில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும்).

எழுத்துப் பரீட்சையில் பெறும் புள்ளிகள் மற்றும், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் தகுதியைப் பரீட்சிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக் குழுவால் வழங்கப்படும் புள்ளிகள் ஆகியவற்றின் அடிப்படையிலான திறமை மற்றும், தற்போது காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் பிரகாரமே ஆட்சேர்ப்பு நடைபெறும். நியமனங்கள் நடைமுறைக்கு வரும் திகதி, 2310/ 29 ஆம் இலக்க, 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் பிரகாரம் அவ்வாணைக்குழுவால் தீர்மானிக்கப்படும்.

06. **பரீட்சைச் செயன்முறை :**

ஆட்சேர்ப்புக்கான எழுத்துப் பரீட்சையின் வினாத்தாள்கள் 02 இல் சித்தியடைதல் வேண்டும். அதற்கான விபரங்கள் பின்வருமாறு :

| *வினாத்தாள்* | *காலம் மணித்தியாலங்கள்/நிமிடங்கள்* | *சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| விடயத்துடன் தொடர்புடைய வினாப் பத்திரம் (பல்தேர்வு விடைகளுக்குரிய வினாப் பத்திரம்) | 01 மணித்தியாலம் | 50 | 100 |
| விடயத்துடன் தொடர்புடைய வினாப் பத்திரம் (கட்டுரை வடிவிலான விடைகளுக்குரிய வினாப் பத்திரம்) | 02 மணித்தியாலங்கள் | 50 | 100 |

(அ) விடயத்துடன் தொடர்புடைய வினாப் பத்திரம் (பல்தேர்வு விடைகளுக்குரிய வினாப் பத்திரம் - சொத்துக்களை நிர்வகித்தல் மற்றும் விலைமதிப்பு முறைமை தொடர்பான விஞ்ஞானப் பட்டப்படிப்பில் கற்பிக்கப்படும் விடயப் பரப்பிற்குரிய 50 வினாக்களுக்கு மேற்படாத பல்தேர்வு வினாக்கள் உள்ளடக்கப்படும்.

(ஆ) விடயத்துடன் தொடர்புடைய வினாப் பத்திரம் (கட்டுரை வடிவிலான விடைகளுக்குரிய வினாப் பத்திரம் - பரீட்சைக்குத் தோற்றுபவரது அனுபவம், விலைமதிப்பு கொள்கைகள், சட்டரீதியான ஏற்பாடுகளும் ஒழுங்குவிதிகளும் பற்றிய அறிவு அத்துடன், சொத்துக்கள், சந்தைகள், நகர அபிவிருத்தி, காணி அபிவிருத்திப் பொரளாதாரம் ஆகியன தொடர்பான அறிவு ஆகியவற்றைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்படும் கட்டுரை வடிவிலான விடைகளுக்குரிய வினாக்கள் உள்ளடக்கப்படும்.

**குறிப்பு**.- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கப்படும் மொழி மூலம் பின்னர் மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(i) தெளிவற்ற கையெழுத்து, எழுத்துப் பிழைகள் ஆகியவற்றுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

(ii) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் அனுமதிப்பத்திரங்கள் அனுப்பிவைக்கப்படும். ஆயினும், பரீட்சைக்குரிய அனுமதிப் பத்திரம் கிடைத்தாலும், பரீட்சைக்குரிய எல்லாத் தகைமைகளையும் கொண்டிருப்பதாகக் கருதப்பட முடியாது.

07. **தகுதியை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை** : தகுதியை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்காகப் பின்வரும் திட்டத்தின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| *தொடர் இல.* | *விடயம்* | | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள் (பதவிக்குரிய துறையில்) :** | | 35 |
| | 1.1 ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் அசையாச் சொத்து முகாமைத் துவமும் விலைமதிப்பும் பற்றிய முதுமாணிப் பட்டம் (MSc. in Real Estate Management & Valuation)<br>அல்லது<br>ஐக்கிய இராச்சிய ரெட்டிங் பல்கலைக்கழகத்தின் (University of Redding, UK)/அசையாச் சொத்து முகாமைத்துவத்துக்கான ஐக்கிய இராச்சிய பல்கலைக்கழகக் கல்லூரியின் (University College of Real Estate Management) அசையாச் சொத்து தொடர்பான முதுமாணிப் பட்டம் (MSc. in Real Estate) | 35 | |
| | 1.2 ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் அசையாச் சொத்து முகாமைத் துவமும் விலைமதிப்பும் பற்றிய பட்டப் பின்படிப்பு டிப்ளோமா | 20 | |
| | (ஆகக்கூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | | |

| தொடர் இல. | விடயம் | | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 02 | **மேலதிக தொழிற்றகைமை :**<br>(உரிய துறைக்குரிய தொழில் நிறுவக அங்கத்துவத்துக்காக)<br>2.1 இலங்கை விலைமதிப்பீட்டாளர் நிறுவக அங்கத்துவம் (Institute of Valuers of Sri Lanka) (10 புள்ளிகள்)<br>அல்லது<br>2.2 அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டதும் விலைமதிப்பிடுதல் தொடர்பானதுமான உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனமொன்றில் ஒரு வருட அல்லது அதற்குக் கூடிய கால ஆராய்ச்சி தொடர்பான கற்கைநெறிக்கான சான்றிதழ் (ஒரு கற்கைநெறிக்கு 5 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 15 புள்ளிகள்) | 10 | 25 |
| 03 | **மேலதிக அனுபவம் :**<br>மேலே 03.11 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளிடையே முதலில் பூர்த்திசெய்த அடிப்படைத் தகைமை, பூர்த்தி செய்யப்பட்ட தினத்திலிருந்து கணக்கிடப்பட்ட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்துக்குப் புள்ளிகள் வழங்கப்படும்.<br>(இலங்கை விலைமதிப்பீட்டாளர் சேவையின் II ஆவது வகுப்பின் I ஆவது தரத்தில் சேவைக்காலம்)<br>(755/660) + (இலங்கை விலைமதிப்பீட்டாளர் சேவையின் II ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில் சேவைக்காலம்)<br>மேற்குறிப்பிட்டவாறு கணக்கிடப்பட்ட ஆகக்கூடிய அளவைக்கொண்ட சேவைக் காலங்களுக்கு அதற்கு விகிதாசாரமாக புள்ளிகள் வழங்கப்படும்.<br>* **குறிப்பு** I - இங்கு சேவைக்காலம் எனப்படுவது முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைக் குறிக்கும்.<br>* **குறிப்பு** II - தரத்திலான சேவைக்காலம், சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரிவு 14 இன் ஏற்பாடுகளின்படி உரிய தரத்திற்கு உள்ளீர்க்கப்படுவதற்கு, அலுவலர் தகைமையைப் பூர்த்திசெய்த தினத்திலிருந்து கணக்கிடப்படும். | | 25 |
| 04 | **வேறு தகைமைகள் :**<br>3.1 தொழிற் செயற்றிறன்<br>திணைக்கள செயற்றிறன் மதிப்பீட்டு முறைமையின் பிரகாரம் கடந்த 05 வருடங்களில் மொத்த செயற்றிறன் மதிப்பீடுகள்<br>01. அதிசிறந்த செயற்றிறன் (மாதாந்தம் பொதுவாக 17.5 இற்கும் அதிகம்) - (10 புள்ளிகள்)<br>02. சாதாரண செயற்றிறன் மட்டம் (மாதாந்தம் பொதுவாக 12.5 - 17.49) - (07 புள்ளிகள்)<br>03. திருப்திகரமான செயற்றிறன் மட்டம் (மாதாந்தம் பொதுவாக 10.0- 12.49) - (05 புள்ளிகள்)<br>(மாதாந்த பொதுவான அளவை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகள் கணக்கிடப்பட்டு, அதன் பொதுவான மதிப்பீடு ஆகக்கூடியது 10 ஆகவும் ஆகக்குறைந்தது 05 ஆகவும் வரும் மதிப்பீடு உள்ளடக்கப்படும்). | | 10 |
| 05 | நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமைக்காக | | 05 |
| | **முழு மொத்தம்** | | **100** |

08. **விண்ணப்பிக்கும் முறை.-**

*மாதிரி விண்ணப்பம்*

(i) இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. அது விண்ணப்பதாரிகளால் இந்த மாதிரி விண்ணப்பத்தின்படி பரீட்சைக்குத் தோற்றும் மொழியில் தமது கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பத்தின் ஒவ்வொரு பகுதியும் தரப்பட்டுள்ள அறிவுறுத்தலின் பிரகாரம் விண்ணப்பதாரியால் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதுடன், தமக்குப் பொருந்தாத பகுதியில் "பொருத்தமற்றது" எனக் குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பத்தில் வெற்றிடமான பகுதி இருப்பின், அது நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். (மாதிரி விண்ணப்பத்தின் 01 தொடக்கம் 05 வரையான பகுதிகள் தாளின் 1 ஆவது பக்கத்திலும், 06 தொடக்கம் 11 வரையான

பகுதிகள் தாளின் 2 ஆவது பக்கத்திலும், ஏனைய பகுதிகள் 3 ஆவது பக்கத்திலும் வரத்தக்கதாக A4 அளவுள்ள தாளில் அமைவாக தயாரிக்கப்பட வேண்டும்.) விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படும்போது பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் மொழியிலான படிவத்தில் சிங்கள மொழிக்கு/தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் இருத்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றை வைத்திருத்தல் பிரயோசனமானது.

*விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் தினம் :*

(ii) விண்ணப்பப் படிவம் 2023.05.22 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், "பரீட்சைகள் ஆணையாளர் அதிபதி, தாபனங்களின் பரீட்சைகள் ஒழுங்குபடுத்தும் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் விண்ணப்பத்தை உள்ளடக்கி அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "I ஆவது வகுப்பின் III ஆவது தரத்திற்குரிய விலைமதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புக்குரிய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை" என்ற பரீட்சையின் பெயர் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

*பரீட்சைக் கட்டணம் :*

(iii) பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியின் வருமானத் தலைப்பு இலக்கம் 20-03-02-13 இன் கீழ் எந்தவொரு தபால்/உப தபால் நிலையத்திலும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1,200.00 பணமாகச் செலுத்தப்பட்டுப் பெறப்படும் பற்றுச்சீட்டு, விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

*விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் :*

(iv) விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம விலைமதிப்பீட்டாளர் ஊடாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 2023.05.22 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் அதிபதிக்குக் கிடைக்கத்தக்க வகையில் அனுப்பப்பட வேண்டும் என்ற வேண்டுகோளுடன், தமது சொந்த விண்ணப்பங்களைக் கால தாமதமின்றி பிரதம விலைமதிப்பீட்டாளரிடம் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

உரிய தினத்துக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களில் அவர்களது கையொப்பங்களைச் சான்றுப்படுத்தும்போது, திணைக்கள/நிறுவனத் தலைவரது கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும் இடப்படாதிருப்பின் அவ்வாறான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட இடமுண்டு.

*விண்ணப்பங்களைச் சான்றுப்படுத்துதல் :*

(v) விண்ணப்பத்தாரிகளின் கையொப்பங்கள் உரிய திணைக்களத் தலைவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட இன்னொரு அலுவலரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பங்கள் அல்லது சம்பந்தப்பட்ட ஏதேனும் ஆவணம் தபாலில் காணாமற்போனமை பற்றியோ, தாமதமடைந்தமை பற்றியோ மேற்கொள்ளப்படும் முறைப்பாடெதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் தினம் வரை விண்ணப்பங்கள் தாமதமடைவதால் ஏற்படும் இழப்புகளை விண்ணப்பதாரிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

09. **பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம்**.-

(i) பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள், வர்த்தமானியில் கேட்கப்படும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளாலேயே விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்ற ஊகத்தின் அடிப்படையில், விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் தினமன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுப் பெறப்பட்ட பற்றுச்சீட்டுகளுடன், பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணப்பதாரிகளின் கையொப்பங்கள் இடப்பட்டுள்ள மற்றும் அவை சான்றுப்படுத்தப்பட்டுள்ள திணைக்களத் தலைவரது சான்றளிப்பு உள்ள, பிழைகளின்றி உள்ள விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டவுடன், அவ்வாறு அனுப்பப்பட்டுள்ளதைக் குறிக்கும் அறிவித்தலொன்று புதினப் பத்திரிகைகளில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்படும். அவ்வாறான அறிவித்தலின் பின்னர் இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்தும் தமது அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி, அவ்வறிவித்தலில் தரப்படும் முறையில் பரீட்சைகள் திணைக்களத்தைத் தொடர்புகொள்ளுதல் வேண்டும். அதில் விண்ணப்பதாரியின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரி மேற்படி விபரங்களுடன் சேர்த்து, அனுமதிப் பத்திரத்தை அனுப்பக்கூடிய தொலைநகல் இலக்கமொன்றையும் உள்ளடக்கி, அவ்வறிவித்தலில் தரப்படும் தொலைநகல்

இலக்கத்திற்கு அனுப்புவது மிகவும் பொருத்தமானது. அப்போது பரீட்சைகள் திணைக்களம் கேட்கும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக, நீங்கள் ஏற்கனவே அனுப்பிய விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்ற பற்றுச்சிட்டின் பிரதி, பதிவுத் தபாலுக்குரிய பற்றுச்சீட்டு ஆகியவற்றை வைத்திருப்பது மிகவும் பொருத்தமானதாக அமையும்.

*பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் சான்றுப்படுத்துதல்* :

(ii) விண்ணப்பத்தாரியின் கையொப்பம் உரிய திணைக்களத் தலைவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட இன்னொரு அலுவலரால் அல்லது கையொப்பத்தைச் சான்றுப்படுத்தக்க இன்னொருவரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

*பரீட்சைக்குத் தோற்றுதல்* :

(iii) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தை ஒப்படைத்தல் வேண்டும். இதனை நிறைவேற்றத் தவறும் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(iv) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை குறித்து விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படமாட்டாது என்பதுடன், பரீட்சையை நடாத்தி, பெறுபேறுகளை வழங்குதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியின் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் உட்படுதல் வேண்டும். அத்தகைய சட்டதிட்டங்களை மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் வழங்கப்படும் தண்டனைகளுக்கு உட்படுதல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சைக்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான எல்லாத் தகைமைகளையும் கொண்டுள்ளாரென ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள்/ விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தாம் சமுகமளித்துள்ள ஒவ்வொரு பாடத்திற்காகவும், பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களிலொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் :

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

11. **தவறான தகவல்களை வழங்குதல்**.- ஒழுங்குவிதிகளின் பிரகாரம், விண்ணப்பதாரியொருவருக்கு இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமைகள் இல்லையெனக் காணப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்பட முடியும். விண்ணப்பதாரி தெரிந்துகொண்டே தவறான தகவல்களை வழங்கினார் என்றோ, ஏதேனும் முக்கியமான தகவல்களை வேண்டுமென்றே மறைத்தார் என்றோ, இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமைகளை அவர் கொண்டிருக்காது பரீட்சைக்குத் தோற்றினார் என்றோ அவரது சேவைக் காலத்தின் எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது கண்டுபிடிக்கப்பட்டால், அவர் உடனடியாகச் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு அது காரணமாகலாம். இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளை உரிய நேரத்தில் வழங்கத் தவறும் விண்ணப்பதாரிகளது விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படும்.

12. இங்கு தரப்படாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானமெதனையும் எடுக்கும் அதிகாரம் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கே உரித்தானதாகும்.

13. இவ்வறிவித்தல் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டாலும், அவற்றிடையே ஏதேனும் முரண்பாடுகள் காணப்படின், சிங்கள மொழியிலான அறிவித்தலே மேலோங்கியிருக்கும்.

14. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களிடையே முழுவதையுமோ அல்லது பகுதியளவிலோ நிரப்பாமல் விடுவதற்குரிய உரிமை பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு உண்டு.

பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

செயலாளர்,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை விலை மதிப்பீட்டுச் சேவையின் பதவிநிலைத் தரத்திலுள்ள I ஆவது வகுப்பின் III ஆவது தர விலை மதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2023**

கவனிக்க வேண்டியது : விண்ணப்பத்தை உள்ளடக்கி அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "I ஆவது வகுப்பின் III ஆவது தரத்திற்குரிய விலைமதிப்பீட்டாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புக்குரிய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை" என்ற பரீட்சையின் பெயர் எழுதப்படுதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பமானது "பரீட்சைகள் ஆணையாளர் அதிபதி, தாபனங்களின் பரீட்சைகள் ஒழுங்குபடுத்தும் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இல. : 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

| |
|---|
| |

(அலுவலகப் பாவனைக்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

01. விண்ணப்பதாரயின் பெயர் :..........................................................................................
 1.1 முழுப்பெயர் : ..............................................................................................................................................
 ..............................................................................................................................................
 (ஆங்கில பெரிய எழுத்தில்)

 1.2 முதலெழுத்துக்களை இறுதியில் கொண்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் : ....................................................................
 ..............................................................................................................................................
 (ஆங்கில பெரிய எழுத்தில்) (உ-ம் : SILVA, A. B.)

 1.3 முழுப் பெயர் : ..............................................................................................................................................
 ..............................................................................................................................................
 (சிங்களத்தில்/ தமிழில்)

02. தனிப்பட்ட முகவரி :..............................
 சிங்களத்தில்/ தமிழில் : ..............................................................................................................................
 ..............................................................................................................................................
 ..............................................................................................................................................

 (முகவரி மாற்றமடையுமாயின், அது குறித்து உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டும்)
 அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) .........................................................
 ..............................................................................................................................................
 ..............................................................................................................................................
 ..............................................................................................................................................

03. பால் (ஆண் - 0, பெண் - 1) ☐
 (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

05. கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

06. விவாக அந்தஸ்து : (விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2) ☐
 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

07. இனம் : (சிங்களவர் -1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, வேறு - 5) ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

08. பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

விண்ணப்ப இறுதித் திகதியன்று வயது :
வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

09. நீங்கள் இலங்கைப் பிரசையாக இருப்பது வம்சாவளியாலா? பதிவு செய்தமையாலா?
(பதிவுப் பிரசையாயின் விபரங்களைக் குறிப்பிடுக.)

10. கல்வித் தகைமைகள் :

| பரீட்சை/பட்டம் | பெற்ற திகதி | பல்கலைக்கழகம்/நிறுவனம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

11. இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் III ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில்/ II ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில் உள்ள அலுவலரெனின்,

(i) III ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில்/ II ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில் நியமனத் திகதி ....................

(ii) 2023.05.22 இல் III ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில்/ II ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில் சேவைக்காலம் .......................

(iii) III ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில்/ II ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில் உரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சை சித்தியடைந்த திகதிகள் :....................................

(iv) 2023.05.22 இல் III ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில்/ II ஆவது வகுப்பின் II ஆவது தரத்தில் பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி ......................

12. நீர் இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையின் III ஆவது வகுப்பின் I ஆவது தரத்தில்/ II ஆவது வகுப்பின் I ஆவது தரத்தில் உள்ள அலுவலரெனின்,

(i) III ஆவது வகுப்பின் I ஆவது தரத்தில்/ II ஆவது வகுப்பின் I ஆவது தரத்தில் நியமனத் திகதி/ உள்ளீர்க்கப்பட்ட/ பதவியுயர்த்தப்பட்ட திகதி ....................

(ii) 2023.05.22 இல் III ஆவது வகுப்பின் I ஆவது தரத்தில்/ II ஆவது வகுப்பின் I ஆவது தரத்தில் சேவைக்காலம் .......................

வருடங்கள் : ................. மாதங்கள் : ...................... நாட்கள் :........................

13. சம்பள உயர்ச்சியை உழைத்துப் பெறுதல் :

i. சம்பள உயர்ச்சித் திகதி :...................

ii. 2018 - உழைத்துப் பெறப்பட்டது/ பெறப்படவில்லை / வேறு
2019 - உழைத்துப் பெறப்பட்டது/ பெறப்படவில்லை / வேறு
2020 - உழைத்துப் பெறப்பட்டது/ பெறப்படவில்லை / வேறு
2021 - உழைத்துப் பெறப்பட்டது/ பெறப்படவில்லை / வேறு
2022 - உழைத்துப் பெறப்பட்டது/ பெறப்படவில்லை / வேறு

iii. வேறு எனின், காரணத்தைத் தருக - நிறுத்துதல்/ குறைத்தல்/ தாமதித்தல்/ பிற்போடுதல்.

14. உமக்கு எதிராக திணைக்களத்தில் ஒழுக்காற்று விசாரணை ஏதும் நடைபெற்றதா? ...........................

15. நீர் ஏதேனும் குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? ...........................

16. பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சிட்டின் மூலப்பிரதி இணைக்கப்பட வேண்டும்)

i. பணம் செலுத்தப்பட்ட தபால் / உப தபால் அலுவலகம் :...........................

ii. செலுத்திய பணம் :........................

iii. செலுத்திய திகதி :........................

iv. பற்றுச்சீட்டு இல. :........................

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுப் பெறப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதி அகற்றப்பட முடியாத வகையில் இங்கு ஒட்டப்பட வேண்டும் (அதன் நிழல்படப் பிரதியை வைத்திருக்கவும்). |

17. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**:

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள எல்லாத் தகவல்களும் உண்மையானவையும், சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என்றோ, பிழையானவை என்றோ, நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரிய வந்தால், நான் பொருத்தமற்றவராவேன் எனவும், தெரிவு செய்யப்பட்ட பின்பு தெரிய வந்தால், நான் எவ்வித உரிமையுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் அறிவேன்.

மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக, பரீட்சைகள் ஆணையாளர் அதிபதியால் வெளியிடப்படும் சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்கிறேன் எனவும் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

----------
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்களத் தலைவரின் சிபாரிசு** :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................ என்பவரை எனக்கு தனிப்பட்ட வகையில் தெரியும் எனவும், அவர் ............................................................................... என்ற பதவியில் சேவையாற்றுகிறாரெனவும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் இல்லை எனவும், அவர் ........................... ஆந் திகதியன்று எனக்கு முன்னால் தனது கையொப்பத்தை இட்டாரெனவும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை இதில் ஒட்டியுள்ளாரெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

அவர் இலங்கை விலைமதிப்பீட்டுச் சேவையில் பதவிநிலை அலுவலராக I ஆவது வகுப்பின் III ஆவது தரத்தில் விலைமதிப்பீட்டாளர் பதவியில் நியமிக்கப்படுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டால் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்கப்பட முடியும்.

------
கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
அலுவலக முகவரி :-----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடுக.)
திகதி :-----.

04-203

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.